**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.289/2023**
**Prosecution Witness - PW7**

| | |
|---|---|
| Name | : திரு. சோபன ராஜ் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.03.2026.

(Accused is present.)

முதல் விசாரணை–

நான் சுசீந்தரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்து பின்னர் தற்போது 31.03.2025 தேதி பணி ஓய்வு பெற்றிருக்கிறேன். 26.04.2022ம் தேதி கருங்கல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருக்கும் போது கருங்கல் காவல் நிலைய தலைமைக் காவலர் 2899 அஜித் குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, புகார் மனுவின் தன்மை படி கருங்கல் காவல் நிலைய குற்ற எண்.184/2022 இ.த.ச. பிரிவுகள் 294(b), 353 மற்றும் 3(1) TNPPDL Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலினை இரணியல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை ஆய்வாளர் ஜெயச்சந்திரன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவ இடத்தில் இருந்து கருங்கல் காவல் நிலையம் 3 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால், சுமார் 3–4 கி.மீ தூரம் இருக்கும். வாகனத்தில் வந்தால் 10 அல்லது 15 நிமிடங்களில் வந்து விடலாம் என்றால், அரை மணி நேரம் கூட ஆகலாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 25.04.2022 இரவு 12.30 மணி என்றால், சரிதான். புகார் மனுவானது மறுநாள் அதாவது 26.04.2022 அன்று காலை 8.00 மணிக்கு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் இருந்து 7.30 மணி நேரம் கழித்து தாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி காலத்தாமதக்கான காரணம் பற்றி முதல் தகவல் அறிக்கையில் விபரங்கள்

குறிப்பிடவில்லை என்றால், சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்திலோ மறுநாளோ, எதிரியின் தந்தை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால், போன் மூலம் கருங்கல் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைக்கப்பெற்று ஆய்வாளரும், உதவி ஆய்வாளர் மகேஷ்–ம் சம்பவ இடத்திற்கு சென்றிருக்கிறார்கள். சம்பவம் நடந்த தினத்தன்று நான் அலுவல் முடிந்து, இரவு 9.00 மணிக்கு என் வீட்டிற்கு சென்று விட்டேன். காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளரும் சம்பவ இடத்திற்கு சென்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், காவல் நிலையத்தில் என்னிடம் விபரம் சொன்னார்கள். ஆய்வாளரும் உதவி ஆய்வாளரும் ஒரே வாகனத்தில் TATA Sumo பதிவெண் TN 74 G 0529 கொண்ட வாகனத்தில் (போலீஸ் ஜீப்) சென்றார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று எதிரியின் வீட்டிற்கு அருகில் இருந்த நபர்கள் யாரும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால், அது விபரம் எனக்கு தெரியாது. புகார் மனுவில் வாகனத்தின் கதவில் உள்ள கண்ணாடி மற்றும் சைடில் உள்ள கண்ணாடிகளை உடைத்தது பற்றி அது வலது பக்கமா, இடது பக்கமா என்றும், முன் டோர் அல்லது பின் டோர் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். புகாரில் கத்தியை வைத்து கண்ணாடியை உடைத்ததாக கூறவில்லை என்றால், சரிதான். புகார் மனுவில் எதிரியை விரட்டி பிடித்தாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கையில் Column 14 ல் புகார்தாரரிடம் இருந்து கையொப்பம் வாங்க வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். ஆனால், அவ்வாறு கையொப்பம் வாங்கவில்லை என்றால், சரிதான். நான் குறிப்பிடும் நேரம், தேதி மற்றும் நான் குறிப்பிடும் விதத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**